அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்:104/2016*
*தேதி:14.06.2016*

# முதலமைச்சர் தில்லி பயணத்தை பற்றி இளங்கோவன் கூறிய கருத்து கண்டிக்கத்தக்கது சமத்துவ மக்கள் கட்சி நிறுவனர் - தலைவர் திரு.ஆர்.சரத்குமார் அறிக்கை

முதலமைச்சர் புதுதில்லி பயணத்தால் தமிழக மக்களுக்கு எந்த பலனும் கிடைக்கப்போவதில்லை என்று இளங்கோவன் கூறியிருக்கிறார்

இதுநாள் வரை முதல்வர் மத்திய அரசு சார்ந்தவர்களை சந்திக்கவில்லை என்று குறை கூறிகொண்டிருந்தார். தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு இது தடையாக இருப்பதாகவும் சொல்லியிருந்தார். தேர்தல் நேரத்தில் பல இடங்களில் இதை பதிவும் செய்துள்ளார். தற்போது முதல்வர் தில்லி பயணத்திற்கு பல்வேறு காரணங்களை கற்பனை கதைகளாக வெளியிடுகிறார்.

தமிழகத்தின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு பொறுப்பான எதிர்கட்சியாக ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுவோம் என்று ஸ்டாலின் உறுதியளித்ததை கருணாநிதியும், அவர்கள் தோழமைக் கட்சியின் தமிழக தலைவர் இளங்கோவனும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்பட்டால்தான் பல திட்டங்கள் செயல்வடிவம் பெரும் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

தமிழக மீனவர் , இலங்கை தமிழர் , நதி நீர் பங்கீடு குறித்த நடவடிக்கைகள், கச்சத்தீவு எனப் பலவிதமான பிரச்சனைகளுக்கு மத்திய அரசின் குறிக்கீடு தேவையாக இருக்கும்போது, முதல்வரின் பயணம் குறித்த இளங்கோவனின் கருத்து ஏற்புடையதல்ல, கண்டிக்கத்தக்கது.

**நன்றி , வணக்கம்**
**உழைப்பவரே உயர்ந்தவர்**
**என்றும் அன்புடன்**



**ஆர் சரத்குமார் B Sc.**
**நிறுவனர் - தலைவர்**